**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 59 of 2020

Depositions of PW -7 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திரு. சுல்தான் இப்ராஹிம்,

Father's Name : காஜா மைதீன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st **day of January** 2026.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் உதவி குடிபுகழ் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.11.2019 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு சூலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது கேஜி அண்ணாமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று சூலூர் காவல் நிலைய குற்ற எண்.945 /2019 சட்டப்பிரிவுகள் 379 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும் அன்றைய தினமே 15.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேஷ் குமார் மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் அண்ணாமலை, செந்தில்குமார், முத்துசாமி, சுந்தர்ராஜ்,

மகேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் 18.11.2019 ஆம் தேதி அதிகாலை சுமார் 05.00 மணியளவில் போலீஸ் பார்ட்டியுடன் காங்கேயம்பாளையம் **RTO** அலுவலகம் அருகே வாகன தணிக்கை மேற்கொண்ட பொழுது சந்தேகத்திற்கு இடமான வந்த ஆம்னி வேன் ஓட்டி வந்தவரை பிடித்து விசாரிக்க முன்னுக்குப் பின் முரணாக பேசியவரை விசாரணை செய்தபோது அவர் தனது பெயர் பரமேஸ்வரன் மற்றும் முகவரியை தெரிவித்தவரை விசாரித்த பொழுது அவர் வந்த வாகனத்தின் சேஸ் நம்பர் அழிக்கப்பட்டிருந்தது. அதனைப் பற்றி அவரிடம் விசாரித்த பொழுது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நடராஜ் மற்றும் கோவிந்தராஜ் அவர்கள் முன்னிலையில் பதிவு செய்து அதன் அடிப்படையில் சுமார் 7 45 மணிக்கு அவர் ஓட்டி வந்த போலியான நம்பர் பிளேட் இருந்த வாகனத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

3. பின்னர் எதிரியை அழைத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு மேற்கூறிய வாகனம் சூலூர் காவல் நிலைய குற்ற எண்.945/2019 வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்து என்பதால் அவரை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும் வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் படிவம் 91 மூலமாக அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பணியிடமாறுதலில் சென்று விட்டதால் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் வசம் ஒப்புவித்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 18.11.2019 ஆம் தேதி அன்று காலை 05.00 மணியளவில் யாருடைய உத்தரவின் அடிப்படையில் நான் வாகன தணிக்கைக்கு சென்றேன் என்றால் பொதுவாக இரவு ரோந்து இருந்தால் காலை நேரங்களில் வாகன தணிக்கை மேற்கொள்வது வழக்கம். அன்றைய தினம் எத்தனை வாகனங்களை சோதனை செய்தேன் என கூற இயலுமா என்றால் நிறைய வாகனங்கள் சோதனை செய்தேன், குறிப்பிட்டு எத்தனை வாகனங்கள் என கூற இயலாது. நான் சோதனை செய்ததாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் மற்றும் சேசஸ் நம்பர் புகாரில் சொல்லி உள்ள சேசஸ் நம்பர் மற்றும் பதிவு எண் கொண்ட வண்டி அல்ல என்றால் வாகன தணிக்கை மேற்கொண்ட பொழுது புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள வண்டியின் பதிவு எண்ணும் தணிக்கையில் செய்யப்பட்ட வண்டி எண்ணும் ஒன்று அல்ல, மேலும் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட வண்டியின் சேசஸ் நம்பர் அழிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் நாங்கள் வாகன தணிக்கை மேற்கொண்ட பொழுது அதே நிறம் மற்றும் அதே மாடல் வாகனங்கள் இருந்தால் சந்தேகத்தின் பெயரில் பறிமுதல் செய்வோமா என்றால் அவ்வாறு செய்ய மாட்டோம், வாகன பதிவேடுகளை பார்த்து சரியாக இருந்தால் அனுப்பி விடுவோம்.

2. 18.11.2019 ஆம் தேதி என்னை கைது செய்த பொழுது குவிமுச 50 ன் கீழான அறிவிப்பு என்னிடம் அளித்துள்ளீர்களா என்றால் சம்பவ இடத்தில் அளிக்கவில்லை. எனக்கு கைதுக்கான காரணம் கைது குறிப்பாக அளிக்கப்பட்டதா என்றால் காவல் நிலையத்தில் வைத்து அழிக்கப்பட்டது. அதில் நீங்கள் கையொப்பமும் செய்துள்ளீர்கள். மேற்படி கைது குறிப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. என்னிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் குறித்தான விபரங்களை கைது குறிப்புகளை 51(3) crpc காலம் எட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 18.11.2019 ஆம் தேதி காலை 5 மணிக்கு என்னை பிடித்ததாக சொல்லப்படும் அதே இடத்தில் தான் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. என்னிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசரில் எதன் அடிப்படையில் சூலூர் காவல் நிலைய குற்ற எண்.945/2019 க்கு சம்பந்தப்பட்டது என தவறாக பதிவு செய்துள்ளது எந்த புலன் விசாரணையும் மேற்கொள்ளாமல் என்றால் சரியல்ல. என்னை கைது செய்தது குறித்து எனது தெரிந்தவர்கள் உறவினர்கள் அல்லது நான் சொல்லும் நபர்களுக்கு எப்பொழுது தகவல் அளிக்கப்பட்டது என்றால் போன் மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. அதற்கான விபரமும் கைது குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எத்தனை மணிக்கு என்னுடைய கைது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது என கூற இயலுமா என்றால் காவல் நிலையம் அழைத்து வந்த பின் கூறப்பட்டது நேரம் ஞாபகம் இல்லை.

4. ஒரு நபர் கைது செய்யப்பட்டால் உடனடியாக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அதனை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலக பலகையில் அல்லது display மூலமாக தெரிவிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். கைது சம்பந்தமாக மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போன் மூலமாகவும் வாக்கிடாக்கி மூலமாகவும் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக போன் மூலம் தகவல் தெரிவிப்போம், பின்னிட்டு தபால் மூலமாகவும் அனுப்பி வைப்போம். வழக்கு கோப்புடன் மேற்படி காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கைது குறித்த விபரத்தை அனுப்பியதை தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் நான் மொத்தம் எத்தனை சாட்சிகள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் 7 சாட்சிகள் விசாரித்து குவிமுச பிரிவு 161(3)ன் படி வாக்கு மூலம் பதிவு செய்துள்ளேன். பிற சாட்சிகளை விசாரிப்பதற்கு அழைப்பானை அனுப்பி உள்ளேனா என்றால் அனுப்பவில்லை.

5. இவ்வழக்கில் சம்பவம் குறித்து தங்களுக்கு தெரியும் என சாட்சிகள் யாரிடமிருந்து குவிமுச பிரிவு 170(2)ன் கீழ் ஏதேனும் ஆவணம் பெற்றுள்ளேனா என்றால் அவ்வாறு எதுவும் பெறவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் cctns புகார் விஜயலட்சுமி என்பவர் கடத்திவிட்டதாக கொடுத்துள்ளார், ஆனால் யாரை கடத்தி உள்ளதாக குறிப்பிடவில்லை. என்னிடம் காட்டப்படும்

புகார் அண்ணாமலை என்பவரால் என்னிடம் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நான் பதிவு செய்யப்பட்ட புகார் என்றால் சரிதான். அதில் என்னுடைய சீல் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் என்னுடைய உதவி ஆய்வாளர் முத்திரை பதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, பதிக்கப்பட்டுள்ளது. பார்வை மகசர் மாதிரி வரைபடத்தில் உதவி ஆய்வாளர் சீல் பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். சட்டப்படி சட்ட நடைமுறைகளை சட்ட ஒழுங்கு பணியில் இருக்கும் நான் பின்பற்றாமல் இவ்வழக்கினை தவறாக என் மீது பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.21 19:00:02 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**